ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2064/45 - 2018 මාර්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.03.29
*2064/45 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் எல்ல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

எல்ல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ் எல்ல பிரதேச சபையின் 10 ஆம் இலக்க தோவ வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாலவிகே சஞ்ஜீவ பெரேரா என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான எல்ல பிரதேச சபையின் 10 ஆம் இலக்க தோவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அத்தநாயக்க முதியன்சேலாகே ஹேமாவதி குமாரிஹாமி என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

இப்போது எல்ல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66 அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, அத்தநாயக்க முதியன்சேலாகே ஹேமாவதி குமாரிஹாமி என்பவர், எல்ல பிரதேச சபையின் 10 ஆம் இலக்க தோவ வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
எல்ல பிரதேச சபை.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2018, மாச்சு 29.

4- 641

1A - G 27406— 17 (2018/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.